முருகப்பெருமான் துணை

**மகான் திரிகோணச் சித்தர் அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**29.02.2024,** வியாழக்கிழமை

1. குருவருளாம் திருவருளை இனி
குறைவிலா உலகோர் பற்றியே
குருவரங்கன் கொள்கை வழி
கூறிடுவேன் பின்பற்றி வருக
2. வருகவே மெய்ஞான பலம்
வருபவர்க்கு உறுதியெனக் கூறி
பெருமைபட திரிகோணச் சித்தரும்
புகலுவேன் சோபகிருது சால் திங்கள்
3. திங்களிலே மூவைபீர் திகதி குருவாரம்
(சோபகிருது வருடம் மாசி மாதம் 17 ம் நாள், 29.02.2024, வியாழக்கிழமை)
தெரிவிப்பேன் துல்லிய ஆசி
ஓங்கார ஞான உலகம் அமைய
ஓங்கார குடிலின் படைப்பு தந்த
4. தந்தநல் தவசி அரங்கனை
தட்டாது உலகோர் ஏற்று
சிந்தை வைத்து குருவேயென
செபதபங்கள் செய்து வர
5. வருகவே உலகோர் தனக்கு
வரமாக அரங்கன் பலம்
குருவருள் எனும் சக்தியாகி
குறைவின்றி பாதுகாப்புத் தந்து
6. தந்துமே வருவோர் சரணாகதிக்கு
தக்கவாறு அவர்கள் கருமவினை
எந்தவித தடையுமின்றி நீக்கி
இணையிலா திருவருள் தன்னை
7. தன்னையே தன் வழிகாட்டி
தானவர்கள் முழுமை காண
அன்னதான சேவை யிலும்
ஆட்படுத்தி அரங்கன் மீட்பாரப்பா

8. அப்பனே அரங்கன் மார்க்கம்
ஆறுமுகனார் அருளுகின்ற
சுப்பிரமண்யர் ஞான மார்க்கம்
சுத்த நெறிபட மக்கள் ஏற்று
9. ஏற்றுமே வேலவன் மேலான
இயம்பிடுவேன் வழிபாட்டுடன்
ஆற்றல் மிக்க ஞானிகள் மேலும்
அனுதினமும் பூசை செய்து
10. செய்துமே அரங்கமகானே
சித்திதரும் மகா குருவென
அய்யமறத் தொடர்ந்து வந்து
அரங்கனுடன் ஐக்கியமாக
11. ஆகவே அழியாமை உறுதி
அனைத்து வகை வரமும் கூடி
மகானாக தேற்றம் கண்டு
மண்ணுலகை மாற்றுவதும் உறுதி
துல்லிய ஆசி முற்றே

–சுபம்–